1982 பிப்ரவரி 4]

(பதில் இல்லை)

## கோமுகி அணை கல்வராயன் மலைப் பகுதிகளைச் சுற்றுலாத்தலங்களாக மேம்படுத்தும் திட்டம்.

*வினா எண்.—29 திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் கோமுகி அணையில் உள்ள பூங்காவையும் கல்வராயன் மலைப் பகுதியையும் சுற்றுலா பயணிகள் கவரும் வண்ணம் நவீனப் படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) கோமுகி அணையில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு சுற்றுலாத் துறையின் மூலமாக விடுதி ஒன்றும் கட்டும் திட்டம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டத்தில் பிச்சாவரம் மற்றும் கோமுகி அணை ஆகிய இரண்டு இடங்களும் மாவட்ட உலாத் தலங்களாக மேம்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் முதல் கட்டமாக பிச்சாவரத்தை மேம்படுத்தவும், பின்பு இரண்டாவது கட்டத்தில் கோமுகி அணையை மேம்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கல்வராயன் மலைப்பகுதியை பற்றி சுற்றுலாத் திட்டம் எதுவும் தற்சமயம் இல்லை.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது கல்வராயன் மலைப்பகுதியை அடுத்த கோமுகி அணையை சுற்றுலாத் தலமாக்குவதற்கு இரண்டாவது கட்டமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள், அதற்காக நான் நன்றியைக் தெரிவித்துக் கொள்கிறேன். கோமுகி அணைப் பகுதியில் அகலமான பரப்பளவு உள்ள இடம் இருக்கிறது. அங்கே வருகின்றவர்கள் தங்குவதற்கு இப்போது பொதுப் பணித் துறையின் சார்பாகக் கட்டப்பட்டுள்ள இரண்டு அறைகள் கொண்ட கட்டடம் தான் தற்போது இருக்கிறது. அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு வசதியாக அங்கே நிரந்தரமான கட்டடம் எப்போது அமைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். கல்வராயன் மலைப்பகுதி திட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே மலைவாழ் மக்கள் இருந்து கொண்டிருக்கின்றார்கள். மத்திய அரசின் சார்பில் ஐந்து கோடி ரூபாய் சாலைகள் வசதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இயற்கை வளமுள்ள கல்வராயன் மலைப் பகுதியையும் சேர்த்து ஒருங்கிணைந்த திட்டமாகச் செயல்படுத்துவதற்கு சுற்றுலாத் துறை முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இருக்கிற நிதியாதாரங்களை வைத்து கோமுகி அணைப்பகுதியைச் சுற்றுலாத் தலமாக்க அடிப்படை தேவைகளை உருவாக்குகின்ற முயற்சியில சுற்றுலாத் துறை ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள பிச்சாவரம் பகுதியை ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாக்க வேண்டுமென்ற விருப்பத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டிருந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில் நடக்கும் இந்த அரசு அதற்கான முயற்சியில் எந்தெந்த வகைகளில் திட்டங்களைப் போட்டிருக்கிறது. எந்தெந்த முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. அதற்காக எவ்வளவு தொகையைச் செலவிட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

(முற்பகல் 9-30.)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் ;லைவரவர்களே, என்னுடைய விடையில் ஒரு பகுதியிலேயே பிச்சாவரத்தை முதல் கட்டத்தில் சுற்றுலாத் தலமாக மேம்படுத்துகின்ற திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம் என்று தெரிவித்திருக்கிறேன். அங்கே பல்வேறு விதமான திட்டங்கள் நிறைவேற்றுப்பட்டு வருகின்றன. தனிக் கேள்வி போட்டால் மாண்புமிகு உறுப்பினர்கள் மனம் மகிழத்தக்க வகையில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற திட்டங்களைப்பற்றி விரிவாகச் சொல்ல இயலும்.

## தமிழக விவசாயிகள் சங்கம் அரசின் முன்வைத்த கோரிக்கைகள்

*வினா எண். 30—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக விவசாயிகள் சங்கம் 9 அம்ச கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவற்றுள் எந்தெந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ): ஒரு விவர அறிக்கை * அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

---

*281-290ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.